*5*

# குறிப்பிடத்தக்க குறிகளும் திகைப்பூட்டும் அடையாளங்களும்

நமது முந்திய பாடத்தில் நாம், வெளிப்படுத்தின விசேஷத்தின் அடையாளத்துவத்தினால் மக்கள் பயமுறுத்தப் படுகின்றனர் என்பதை ஒப்புக்கொண்டிருந்தோம். இந்தப் புத்தகத்தின் திறப்பு/தொடக்க வார்த்தைகளை நெருக்கமாகக் கவனித்தால், அதன் உருவகம் குறித்துத் திகைப்படையக் கூடாது: "தேவன் இயேசுகிறிஸ்துவுக்கு ஒப்புவித்ததும், இவர் தம்முடைய தூதனை அனுப்பி, தம்முடைய ஊழியக்காரனாகிய யோவானுக்கு வெளிப்படுத்தினதுமான விசேஷம்" (*1:1*; KJV). முதலாவது, "வெளிப்படுத்தின விசேஷம்" என்பது *apokalupsis* என்ற வார்த்தையில் இருந்து மொழிபெயர்க்கப்பட்டுள்ளது, மற்றும் இறைவெளிப்பாட்டு இலக்கியம் அடையாளங்களால் நிறைந்ததாக உள்ளது. மற்றும், "வெளிப் படுத்தினதுமான" "signified" என்ற வார்த்தை, சேமிப்பில் உள்ளது என்ன என்பதைக் குறிப்பாக நமக்குக் கொடுக்கிறது.[1] "Signified" என்ற வார்த்தையானது, "குறி" என்பதற்கான கிரேக்க வார்த்தையில் இருந்து மொழிபெயர்க் கப்பட்டுள்ளது, இது "ஒரு குறியினால் சுட்டிக்காண்பித்தல்" என்ற நேரடி அர்த்தம் கொண்டுள்ளது.[2] W. E. வைன் அவர்கள், வெளிப்படுத்தின விசேஷம் *1:1*ல் பயன்படுத்தப்பட்டுள்ள இவ்வார்த்தையானது, "குறிகளினால் விளக்கப்படுதல் என்ற கருத்தைத் தெரிவிக்கலாம்" என்று குறிப்பிட்டார்.[3] இதன் சாத்தியக் கூற்றினை வலியுறுத்துவதற்கு, வேதாகம போதகர்கள் வெளிப்படுத்தின விசேஷம் புத்தகத்தை அறிமுகப்படுத்தும்போது, "signified" என்ற வார்த்தையைக் கரும்பலகையில், "SIGN - ified" என்று பெரும்பாலும் எழுதுகின்றனர்.

இந்தக் குறிகளும் அடையாளங்களும் முதல் நூற்றாண்டு வாசகர்களுக்குப் பழக்கமானதாக இருந்தாலும், நமக்குப் பழக்கமற்றவைகளாக உள்ளன என்பதே நமது பிரச்சனையாக உள்ளது. அடையாளத்துவத்தை மிகவும் பழக்கமானதாக நாம் உணரச் செய்தல் என்பதே முந்திய மற்றும் இந்தப் பாடங்களின் நோக்கமாக உள்ளது. முந்திய பாடத்தில் நாம், பொதுவாக அடையாளங்களைப் பற்றிக் கலந்துரையாடி அவற்றை விளக்கப் படுத்துவதற்கான சில கருத்துக்களை முன்வைத்தோம். மேலும் நாம், வெளிப்படுத்தின விசேஷம் புத்தகத்தில் காணப்படுகிற அடையாளங்

களின் நான்கு அடிப்படை வகைகளையும் உற்று கவனித்தோம். நாம் ஏற்கனவே, அடையாளத்துவமாய்ப் பயன்படுத்தப்பட்ட எண்கள் பற்றிய முதல் விஷயங்களைக் கண்ணோக்கியுள்ளோம். இந்தப் பாடத்தில் நாம், அடையாளங்களின் மற்ற மூன்று வகைகளைப் பகுப்பாய்வு செய்வோம்.

## பழைய ஏற்பாட்டில் இருந்து அடையாளத்துவம்

வெளிப்படுத்தின விசேஷத்தில் பழைய ஏற்பாட்டிலிருந்து நானூறுக்கும் அதிகமான குறிப்புகள் அடங்கியுள்ளது.[4] இவற்றில் பெரும்பாலான குறிப்புகள் பழைய ஏற்பாட்டுப் பாத்திரங்கள் அல்லது நிகழ்ச்சிகளைப் பற்றியவைகளாக உள்ளன. பழைய ஏற்பாட்டுக்குப் பழக்கமாயிருந்த தொடக்க காலக் கிறிஸ்தவர்களுக்கு, ஒரு பாத்திரம் அல்லது நிகழ்ச்சியைப் பற்றிக் குறிப்பிடுதலே சிந்தையில் ஒரு பதில் செயலைத் தூண்டியெழுப்பும், அது பதிலுக்கு, வெளிப்படுத்தின விசேஷத்தில் அதன் பயன்பாட்டினுடைய தனிச்சிறப்புக்கான குறிப்பு ஒன்றை அளிப்பதாயிருக்கும். இந்தக் குறிப்புகளில் ஒருபகுதி அடங்கிய பட்டியல் ஒன்று கீழே தரப்படுகிறது, இது நாள் வரிசைமுறையில் ஒழுங்குபடுத்தப் பட்டுள்ளது. இந்த வரலாறுகள் உங்களுக்குப் பழக்கமானவைகளாய் இருந்தால், அது வெளிப்படுத்தின விசேஷம் பற்றிய உங்கள் படிப்பை மேம்படுத்தும்.

**படைப்பும் வீழ்ச்சியும்**

*முதலாம் வானமும் பூமியும் (ஆதியாகமம் 1:1; வெளிப்படுத்தின விசேக்ஷம் 21:1)*

*ஏதேன்/பரதீசு (ஆதியாகமம் 2:8; 3:23; வெளிப்படுத்தின விசேஷம் 2:7)*

*ஜீவ விருட்சம் (ஆதியாகமம் 2:9; 3:22-24; வெளிப்படுத்தின விசேஷம் 2:7; 22:2)*

*மேசியாவைப் பற்றிய முதல் வாக்குத்தத்தம் (ஆதியாகமம் 3:15; வெளிப்படுத்தின விசேஷம் 12:7-11)*

**முற்பிதாக்கள்**

***(ஆதியாகமம் 10:1; 12:1; வெளிப்படுத்தின விசேஷம் 4:4)***

*வானவில் (ஆதியாகமம் 9:11-17; வெளிப்படுத்தின விசேஷம் 4:3; 10:1)*

*சோதோம் (ஆதியாகமம் 18:16-33; 19:1-29; வெளிப்படுத்தின விசேஷம் 11:8)*

*பன்னிரண்டு கோத்திரங்கள் (ஆதியாகமம் 35:22-26; வெளிப்படுத்தின விசேஷம் 7:4-8; 21:12)*

*யூதாவுக்கு வாக்குத்தத்தம் (ஆதியாகமம் 49:10; வெளிப்படுத்தின விசேஷம் 5:5)*

*யூதா ஒரு சிங்கம் என்று குறிப்பிடப்படுதல் (ஆதியாகமம் 49:9)*

**மோசேயும் யாத்திரையும்**

*எகிப்து (யாத்திராகமம் 1:1, 13, 14; வெளிப்படுத்தின விசேஷம் 11:8)*

*பத்து வாதைகள் (யாத்திராகமம் 7:14-25; 8:1-32; 9:1-35; 10:1-29; 11:1-10; 12:1-32; வெளிப்படுத்தின விசேஷம் 8:7-13; 9:1-21; 11:6;*

*15:1-8; 16:1-21; 22:18)*

*பஸ்கா ஆட்டுக்குட்டி (யாத்திராகமம் 12:21-27; வெளிப்படுத்தின விசேஷம் 5:6)*

*மோசேயின் வெற்றிப்பாடல் (யாத்திராகமம் 15:1-19; வெளிப்படுத்தின விசேஷம் 15:3, 4)*

*வனாந்தரம் (யாத்திராகமம் 16:1; வெளிப்படுத்தின விசேஷம் 12:6, 14)*

*தேவனிடமிருந்து மன்னா (யாத்திராகமம் 16:31, 35; வெளிப்படுத்தின விசேஷம் 2:17)*

*சீனாய் மலை (பூமியதிர்ச்சி, மின்னல், இடிமுழக்கம்; யாத்திராகமம் 19:16-20; வெளிப்படுத்தின விசேஷம் 4:5)*

*ஆசரிப்புக்கூடாரம் (தேவாலயத்திற்கான குறிப்புகளையும் காணவும்) (யாத்திராகமம் 25:9; வெளிப்படுத்தின விசேஷம் 21:3)*

*உடன்படிக்கையின் பெட்டி (யாத்திராகமம் 25:10; எண்ணாகமம் 10:33; வெளிப்படுத்தின விசேஷம் 11:19)*

*விளக்குத்தண்டு (யாத்திராகமம் 25:31; வெளிப்படுத்தின விசேஷம் 1:12, 20; 2:1; 4:5)*

*பலிபீடம் (யாத்திராகமம் 27:1; வெளிப்படுத்தின விசேஷம் 6:9; 8:5)*

*தூபம் (யாத்திராகமம் 30:1; வெளிப்படுத்தின விசேஷம் 5:8; 8:3, 4)*

*ஜீவ புஸ்தகம் (யாத்திராகமம் 32:33; சங்கீதம் 69:28; மல்கியா 3:16ஐயும் காணவும்; வெளிப்படுத்தின விசேஷம் 3:5; 20:12, 15; 21:27)*

*பாலாம் (எண்ணாகமம் 22:5; 2 பேதுரு 2:15ஐயும் காணவும்; வெளிப்படுத்தின விசேஷம் 2:14)*

### *நியாயாதிபதிகள்*

*மெகிதோவின் பள்ளத்தாக்கு (நியாயாதிபதிகள் 5:19; 2 நாளாகமம் 35:22-24; வெளிப்படுத்தின விசேஷம் 16:16)*

### *தாவீதும் ஒன்றுபட்டிருந்த இராஜ்யமும்*

*தேர்ந்துகொள்ளப்பட்ட எருசலேம் (2 சாமுவேல் 5:5-9; வெளிப்படுத்தின விசேஷம் 3:12; 21:2, 10)*

*மேசியா தாவீதின் மூலமாக வரவேண்டியிருந்தது (2 சாமுவேல் 7:8-17; வெளிப்படுத்தின விசேஷம் 5:5; 22:16)*

*தேவாலயம் (ஆசரிப்புக் கூடாரத்திற்கான குறிப்புகளையும் காணவும்; 1 இராஜாக்கள் 6:1-38; வெளிப்படுத்தின விசேஷம் 3:12; 11:19; 15:5, 8; 16:1)*

*தேவாலய ஆராதனையில் சுரமண்டலங்கள் (1 இராஜாக்கள் 10:12; 1 நாளாகமம் 25:6; வெளிப்படுத்தின விசேஷம் 5:8; 14:2; 15:2)*

### *தீர்க்கதரிசிகளும் பிரிவுபட்ட இராஜ்யமும்*

*எலியா (1 இராஜாக்கள் 17:1; யாக்கோபு 5:17, 18ஐயும் காணவும்; வெளிப்படுத்தின விசேஷம் 11:6)*

*யேசபேல் (1 இராஜாக்கள் 16:31; வெளிப்படுத்தின விசேஷம் 2:20)*

*நிகழ்ச்சிகள் மற்றும் பாத்திரங்கள் ஆகியவை பற்றிய இந்தக் குறிப்புக்களுடன் கூடுதலாக பழைய ஏற்பாட்டு இறைவெளிப்பாட்டு பகுதி களில் இருந்து கடன் பெறப்பட்ட அடையாளத்துவம் அடங்கிய பழைய*

ஏற்பாட்டுக் குறிப்புகள் சிலவும் வெளிப்படுத்தின விசேஷத்தில் காணப் படுகிறது. இந்தக் குறிப்புகளில் சிலவற்றின் பட்டியல் கீழே தரப்படுகிறது, இதுவும் நாள்வரிசை முறைமையின்படி ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது. (இந்தக் குறிப்புகளில் நீங்கள், முந்திய பாடத்தின் தொடக்கத்தில் குறிப்பிடப்பட்ட வினோதமான சில உயிரினங்களைக் காண்பீர்கள்.) மூலக்குறிப்பை நீங்கள் முழுமையாகப் புரிந்துகொள்ளவில்லையென் றாலும், பழைய ஏற்பாட்டு வார்த்தை அமைப்புடன் வெளிப்படுத்தின விசேஷத்தின் வார்த்தை அமைப்பை ஒப்பிட இது உதவியாய் இருப்பதைக் கண்டறிவீர்கள்.

### தீர்க்கதரிசிகளும் பிரிவுபட்ட இராஜ்யமும்

*ஏசாயா*

- *நான்கு ஜீவன்கள் (ஏசாயா 6:1-7; எசேக்கியா 1:4-25; 10:1-22ஐயும் காணவும்; வெளிப்படுத்தின விசேஷம் 4:6-9)*
- *பாபிலோனின் வீழ்ச்சி (ஏசாயா 13:1-22; பழைய ஏற்பாட்டின் மற்ற தீர்க்கதரிசிகளையும் காணவும்; வெளிப்படுத்தின விசேஷம் 16:19; 17:5; 18:2)*
- *தாவீதின் திறவுகோல் (ஏசாயா 22:22; வெளிப்படுத்தின விசேஷம் 3:7)*
- *திராட்ச இரச ஆலை (ஏசாயா 63:3; வெளிப்படுத்தின விசேஷம் 14:14-20)*
- *புதிய வானம்(ங்கள்) மற்றும் புதிய பூமி (ஏசாயா 65:17-25; 66:22-24; வெளிப்படுத்தின விசேஷம் 21:1-27; 22:1-5)*

*யோவேல்*

- *வெட்டுக்கிளிகள் (யோவேல் 2:1-27; வெளிப்படுத்தின விசேஷம் 9:3-10)*

### தீர்க்கதரிசிகளும் அடிமைத்தனமும்

*எசேக்கியேல்*

- *மேசியா மற்றும் தேவன் ஆகியோரைப் பற்றிய விவரிப்புகள் (எசேக்கியல் 1:4, 26-28; 43:2; வெளிப்படுத்தின விசேஷம் 1:12-16; 4:2, 3, 5)*
- *புத்தகச்சுருளை உண்ணுதல் (எசேக்கியல் 2:7-10; 3:1-4; வெளிப்படுத்தின விசேஷம் 10:8-11)*
- *கோகு, மாகோகு (எசேக்கியல் 38:2; 39:1, 6; ஆதியாகமம் 10:2ஐயும் காணவும்; வெளிப்படுத்தின விசேஷம் 20:8)*
- *பறவைகளுக்கு அழைப்பு (எசேக்கியல் 39:17-20; வெளிப்படுத்தின விசேஷம் 19:17, 18)*
- *இருகரைகளிலும் மரங்களுடன் கூடிய ஜீவத்தண்ணீர் ஓடும் நதி (எசேக்கியல் 47:1-12; வெளிப்படுத்தின விசேஷம் 22:1-3)*
- *அற்புதமான நகரம் (எசேக்கியல் 48:30-35; வெளிப்படுத்தின விசேஷம் 21:12, 13, 16)*

*தானியேல்*

- *மேசியா மற்றும் தேவன் ஆகியோரைப் பற்றிய விவரிப்புகள் (தானியேல் 7:1-10, 13, 14; 10:5, 6; வெளிப்படுத்தின விசேஷம்*

*1:12-16; 4:2, 3, 5)*

*மிருகம்(ங்கள்) (தானியேல் 7:1-8; வெளிப்படுத்தின விசேஷம் 13:1, 2)*

*திறக்கப்பட வேண்டிய புத்தகங்கள் (தானியேல் 7:10; வெளிப்படுத்தின விசேஷம் 20:11-15)*

***தீர்க்கதரிசிகளும் அடிமைத்தனத்தில் இருந்து திரும்புதலும்***

*சகரியா*

*அளவுகோல் (சகரியா 2:1-5; எசேக்கியல் 40:3ஐயும் காணவும்; வெளிப்படுத்தின விசேஷம் 11:1, 2; 21:15)*

*இரண்டு சாட்சிகள் - ஒலிவ மரங்களும் விளக்குத்தண்டுகளும் (சகரியா 4:1-14; வெளிப்படுத்தின விசேஷம் 11:3, 4)*

நீங்கள் பழைய ஏற்பாட்டுக் குறிப்புகளை அவற்றிற்கு இணையான வெளிப்படுத்தின விசேஷத்தின் குறிப்புகளுடன் ஒப்பிடுகையில், *"திரிபு"* எதுவும் உள்ளதா என்று கண்ணோக்குங்கள். வெளிப்படுத்தின விசேஷத்தின் குறிப்பு அதற்கு இணையான பழைய ஏற்பாட்டின் குறிப்பில் இருந்து ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட விபரங்களில் அடிக்கடி மாறுபடும். இது, வெளிப்படுத்தின விசேஷம், பழைய ஏற்பாட்டில் பேசப்பட்ட அதே விஷயத்தை மிகச்சரியாகக் குறிப்பிடுவதில்லை, ஆனால் அதற்கு மாறாக அதைப்போன்ற அல்லது அதனுடன் தொடர்புடைய கருத்து ஒன்றைக் குறிப்பிடுகிறது என்பதை நீங்கள் அறியும்படி அனுமதிக்கிறது. எடுத்துக் காட்டாக, வெளிப்படுத்தின விசேஷம் 7:4-8ல் பன்னிரண்டு கோத்திரங்களின் பட்டியலொன்று உள்ளது. இதில் உள்ள திரிபை நீங்கள் கவனிக்கவில்லையென்றால், இது யூதர்களின் கோத்திரங்களை அப்படியே நேரடியாகக் குறிக்கிறது என்று யூகித்துக் கொள்வீர்கள். இருப்பினும், அந்தப் பட்டியலை நீங்கள் பழைய ஏற்பாட்டில் உள்ள (ஆதியாகமம் 35:22-26 போன்ற) பட்டியல்களுடன் ஒப்பிடும் போது இந்தப் பட்டியல் தவறானது என்பதை நீங்கள் காண்பீர்கள்: இந்தப் பன்னிருகோத்திரங்களின் பட்டியலில் லேவி உள்ளடங்கியிருக்கிறது, தாண் தவறவிடப்பட்டுள்ளது, மற்றும் இன்னபிற. இவ்விதமாக யோவான், மாம்சத்திற்குரிய இஸ்ரவேலர்களைக் குறிப்பிடுவதில்லை என்பதை நீங்கள் உடனடியாக அறிகின்றீர்கள்.[5]

## வரலாற்றுப் பின்னணியின் அடிப்படையில் அமைந்துள்ள அடையாளங்கள்

வெளிப்படுத்தின விசேஷத்தைப் படிப்பதற்கு நல்லதொரு வரலாற்றுப் பின்னணி (அறிவைக்) கொண்டிருத்தல் என்பதில், ஆசியாவின் ஏழு சபைகளும் இருந்த நகரங்களின் குணங்களை அறிதல், சபைக்குள் இரகசியமாய்ப் பதுங்கி வந்து கொண்டிருந்த உபதேசப் பிழைகளைப் புரிந்து கொள்ளுதல், மற்றும் ரோமப் பேரரசின் பாகமாயிராத (பார்த்தியா போன்ற) சில நாடுகளைப் பற்றிச் சற்றே பழக்கப்பட்டிருத்தலும் கூட உள்ளடங்கியிருக்

கின்றன. இதில் பெரும்பான்மையானவற்றைப் பற்றி, நாம் வசனப் பகுதியைப் படிக்கும்போது கலந்துரையாட முடியும். ரோமப்பேரரசு பற்றிய பின்னணித் தகவல்களும் அது கிறிஸ்தவத்துடன் எவ்வாறு தொடர்பு கொண்டிருந்தது என்பது பற்றிய விபரங்களும் மிகவும் முக்கியத்துவம் வாய்ந்தவைகளாக உள்ளன. ரோமப்பேரரசு பற்றிய பின்வரும் ஆய்வு உதவியாக இருக்கலாம்.

**தொடக்க வரலாறு**

ஏவுதல் பெற்றிராத பாரம்பரியத்தின்படி, ரோமுலஸ் மற்றும் ரேமுஸ் ஆகியோர் கி.மு. 753ல் ரோமப் பேரரசைத் தோற்றுவித்தனர். ரோமாபுரி நகரம் ஏழு மலைகளின்மீது கட்டப்பட்டது. கி.மு. 509ல் அவர்களை ஒடுக்கிய அரசனைத் துரத்திய ரோமர்கள் ஒரு குடியரசை நிலைநாட்டினர்.

**ஜூலியஸ் சீஸர் (கி.மு. 49-44)**

ஜூலியஸ் சீஸர் என்பவர் ஒரு அரசியல்வாதியாக வாழ்வைத் துவக்கினார், ஆனால் அவர் ஒரு இராணுவ மேதையாக மாறினார். கி.மு. 49ல் அவர் ரோம செனட்டை (சட்ட அவையை) இராணுவப்படை யைக் கொண்டு கீழ்ப்படுத்தி தம்மைச் சர்வாதிகாரியென்று அறிவித்துக் கொண்டு, ஜூலியோ கிலவுதியு அரசபரம்பரையைத் தோற்றுவித்தார்.[6] ரோமப் பேரரசைத் துவக்கியதற்கான நற்பெயரை இவர் பெற்றுக்கொண் டார். கடைசியில், "சீஸர்" ("இராயன்") என்பது ரோமப்பேரரசின் பொது வான பட்டப் பெயராக ஆயிற்று.[7]

ஜூலியஸ் சீஸர் ஒரு தெய்வப்பிறவியாக ஏற்றுக்கொள்ளப்பட்டார் மற்றும் ஆலயங்கள் அவருக்கு அர்ப்பணிக்கப் பட்டன. அவர் அரசகிரீடத் தை ஏற்றுக்கொள்ள மறுத்தார், ஆனால் அவர் என்றாவது ஒரு நாளில் தம்மை அரசராக்கிக் கொள்ளுவார் என்று பலர் பயந்தனர். கி.மு. 44ம் ஆண்டு மார்ச்சு மாதம் 15ம் தேதியன்று அவர், புரூட்டஸ், கேசியஸ் மற்றும் பிற சூழ்ச்சியாளர்களால் கொல்லப்பட்டார்.

**அகஸ்டஸ் சீஸர் (கி.மு. 27 - கி.பி. 14)[8]**

ஆக்டேவியன் என்பவர் ஜூலியஸ் சீஸரின் மைத்துனராவார், இவர் (ஜூலியஸ் சீஸர்), அவரை (ஆக்டேவியனை)த் தத்தெடுத்து வளர்த்துத் தமது வாரிசாக்கிக் கொண்டிருந்தார். ஜூலியஸ் சீஸர் இறந்தபோது, பேரரசு உள்நாட்டு யுத்தத்தினால் ஊடுருவப்பட்டது. பல யுத்தங்களுக்குப் பின்பு ஆக்டேவியன், ரோமாபுரியின் முதல் பேரரசர் ஆனார். கி.மு. 27ல், அவர் ரோமாபுரியின் குடியுரிமை அரசாங்கத்தை மீளக்கட்டுவித்தார், மற்றும் சென்ட் சபையானது அவருக்கு அகஸ்டஸ் ("மேன்மைதாங்கியவர்") என்ற பட்டத்தை அளித்துக் கௌரவித்தது. அவர் தமக்கு சென்ட் சபையை ஆலோசனை அங்கமாகக் கொண்டு, நாட்டின் உண்மையான தலைவரா னார்.

அகஸ்டஸின் ஆட்சியானது விளைவுகளை அறியாமலேயே "காலம் நிறைவேறினபோது" (கலாத்தியர் 4:4) என்ற கூற்றிற்கிணங்க, ரோமப்

பேரரசில் கிறிஸ்தவத்திற்கான வழியை ஆயத்தம் செய்வித்தது. *Pax Romana* (ரோமாபுரிச் சமாதானம்) என்பது நிலைநாட்டப்படுதல், கிரேக்க மொழி பரவுதல் (புதிய ஏற்பாடானது *koine*[9] கிரேக்க மொழியில் எழுதப்பட்டது), மற்றும் பேரரசு அளவில் போக்குவரத்து, செய்தித் தொடர்பு ஆகியவற்றை அனுமதித்த சாலைகளின் பலத்த வலைப்பின்னல் கட்டியெழுப்பப்படுதல் ஆகியவை இந்தத் தயாரிப்புப் பணிகளில் உள்ளடங்கியிருந்த சிலவிஷயங் களாய் இருந்தன. இயேசு பிறந்தபோது அகஸ்டஸ் அரசாண்டு கொண்டிருந்தார் (லூக்கா 2:1). (லூக்கா சுவிசேஷத்தில் இவர் அகுஸ்து ராயன் என்று அழைக்கப் படுகின்றார்.)

**திபேரியுஸ் சீஸர் (திபேரியு ராயன்) (கி.பி. 14-37)**

திபேரியுஸ், அகஸ்டஸின் வளர்ப்பு மகனாகவும் மருமகனாகவும் இருந்தார். அகஸ்டஸ் இறந்தபோது, திபேரியு பேரரசர் ஆனார். இவர், இயேசுவின் சொந்த ஊழியம் மற்றும் அவரது மரணம் ஆகியவை நடை பெற்றபோது ஆட்சி செய்து கொண்டிருந்தார் (லூக்கா 3:1). சபை நிலை நாட்டப்பட்ட போது இவர் இன்னமும் அதிகாரத்தில் இருந்தார்.

**காயுஸ் கலிகுலா (கி.பி. 37-41)**

திபேரியஸ்ஸின் பெரிய மைத்துனரான கலிகுலா, அடுத்த பேரரசர் ஆனார். பல ஆண்டுகளுக்குப் பின்பு, கடுமையான சுகவீனத்தின் விளை வாக, இவர் மனநிலை தவறியவரானார். (இவர் "பைத்தியக்காரப் பேரரசர்" என்று அறியப்பட்டிருந்தார்.) இவர், முக்கியமாக யூதர்களுக்கு எதிரான மதரீதியான துன்புறுத்துதலைத் தொடக்கியிருந்தார். இவரது கொடூரத் தன்மைகள் இவரைச் சுற்றியிருந்தவர்களிடத்திற்கு(ம்) விரிவாக்கப்பட்ட போது, இவரது சொந்த அலுவலர்களே இவரைக் கொலை செய்தனர். புதிய ஏற்பாட்டில் இவரைப் பற்றிக் குறிப்பிடப்படவில்லை.

**கிலவுதியுஸ் சீஸர் (கிலவுதியு ராயன்) (கி.பி. 41-54)**

கிலவுதியுஸ் என்பவர், திபேரியுஸ் என்பவருக்கு மைத்துனராகவும், கலிகுலாவுக்கு மாமாவாகவும் இருந்தவர். கலிகுலா கொல்லப்பட்ட பின்பு, கிலவுதியு பேரரசர் என்று அரசக் காவலர்களால் அறிவிக்கப்பட்டார். கிலவுதியுஸ்ஸின் ஆட்சியின்போது, ரோமாபுரி நகரம் உலகத்தின் வர்த்தக மையமாயிற்று, எகிப்து, வடக்கு ஆப்பிரிக்கா, சிசிலி, ஸ்பெய்ன், சைப்ரஸ் (சீப்புரு), பிரிட்டன், கிரீஸ் (கிரேக்கம்), பால்க்கன் நாடுகள் மற்றும் பிற இடங்களில் இருந்து உற்பத்திப் பொருட்கள் ரோமாபுரிக்குக் கொண்டு வந்து குவிக்கப்பட்டன.

புதிய ஏற்பாட்டில் கிலவுதியு இருமுறை குறிப்பிடப்பட்டுள்ளார் (நடபடிகள் 11:28; 18:2). இவர் ரோமாபுரியில் இருந்து யூதர்களை வெளியேற்றியபோது (நடபடிகள் 18:2), அவர் அனேகமாகக் கிறிஸ்தவர்களையும் உள்ளடக்கி இருக்கலாம்; ஆனால் இவர் துன்புறுத்துவதற்குக் கிறிஸ்தவர்களைத் தனிப்படுத்தவில்லை. இவர் தமது நான்காவது மனைவி (மற்றும் மைத்துனி) யினால் விஷம் வைத்துக்

கொல்லப்பட்டார், அவள் தனது மகன் நீரோவுக்குப் பேரரசு கிடைக்க வேண்டும் என்று விரும்பினாள்.

***நீரோ (கி.பி. 54-68)***

*நீரோ, கலிகுலாவின் மைத்துனராகவும், கிலவுதியுஸ்ஸின் வளர்ப்பு மகனாகவும் இருந்தார். இவரது ஆட்சியின் முதல் பகுதியில், இவர் நல்ல மனிதர்களால் ஆலோசனை தரப்பட்டிருந்தார். இந்த சீஸருக்குத் (ராயனுக்கு) தான் பவுல் நடபடிகள் 25:10-12ல் அபயமிட்டார். பவுல் தமது முதல் சிறையிருப் பிலிருந்து விடுவிக்கப்பட்ட காலத்தில், சுயநலமும் கணக்கிட்டபழிவாங்கும் எதிரிகளும், நீரோவைக் கட்டுப்படுத்தினர் - மற்றும் அவரது ஆட்சியானது விரைவிலேயே சரிந்தது. கி.பி. 64ல், ரோமாபுரியை அழித்த நெருப்பை நீரோதான் மூட்டினார் என்று குற்றம் சாட்டப்பட்டபோது, அவர் அந்தப் பழியைக் கிறிஸ்தவர்கள்மீது போட்டார். இவ்விதமாக, ரோமாபுரி அரசாங்கத்தினால் கிறிஸ்தவர்கள் மீதான குறிப்பான முதல் துன்புறுத்துதல் தொடங்கிற்று.*[10]

*ரோமர்களில் பலர் நீரோவை நம்பாதிருந்தனர். கி.பி. 68ல், ஸ்பெயினில் இருந்த ரோமப்படைகள் கலகம் செய்து, கல்பா என்பவரைத் தங்கள் பேரரசர் என்று அறிவித்தனர். நீரோ தப்பி ஓடினார். அவர் பிடிக்கப்பட்ட போது, தற்கொலை செய்து கொண்டார். இவ்விதமாக ஜுலியோ - கிலவுதியன் அரசவம்ச ஆட்சியானது முடிவு பெற்றது. சில ரோமர்களின் இதயங்களில் நீரோ ஒரு விசேஷித்த இடத்தைக் தக்க வைத்திருந்தார் என்பது வினோதமானதாக இருந்தது. ஒரு புராணக்கதையானது, "புராணத்துவமாக மறுபடியும் உயிர்ப்பிக்கப்பட்ட நீரோ" எழுந்தார் என்று அழைத்து, நீரோ ஒரு நாளில் திரும்ப வருவார் என்று உறுதிப்படுத்துகிறது.*[11]

***"நான்கு பேரரசர்களின் ஆண்டு" (கி.பி. 68-69)***

*நீரோவின் மரணத்தைத் தொடர்ந்து ஒரு குழப்பமான காலம் ஏற்பட்டது. துரித வரிசையில் நான்கு பேரரசர்கள் ஆண்டனர், இவர்கள் ஒவ்வொருவரும் ரோமாபுரியின் படைப்பிரிவு ஒன்றினால் ஆதரவு தரப்பட்டனர். இவர்களில், பின்வரும் முதல் மூன்று பேர்களை "உரிமைகோருபவர்கள்" அல்லது "போலி நடிப்பாளர்கள்" என்று பல எழுத்தாளர்கள் குறிப்பிடுகின்றனர்: கல்பா (ஜுன் 68 - ஜனவரி 69) ஒத்தோ (ஜனவரி - மார்ச்சு 69), மற்றும் விட்டேலியஸ் (ஏப்ரல் - டிசம்பர் 69). (இந்த மனிதர்களில் தொடங்கி, எஞ்சிய பேரரசர்களில் எவருடைய பெயரும் வேதாகமத்தில் குறிப்பிடப்படவில்லை.) வெஸ்பாசியன் என்பவர் நான்காமவராய் இருந்தார், இவர் கி.பி. 67ல் யூதக் கலகத்தை அடக்குவதற் காக நீரோ பேரரசரினால் பலஸ்தீனத்திற்கு அனுப்பப் பட்டிருந்தார். வெஸ்பாசியன், தமது மகன் தீத்துவை ரோமப்படைகளுக்குப் பொறுப் பாளியாக வைத்துவிட்டு ரோமாபுரிக்குத் திரும்பினார்.*

***ஃபிளேவியஸ் வெஸ்பாசியன் (கி.பி. 69-79)***

*வெஸ்பாசியன் பேரரசர் என்று, கி.பி. 69, டிசம்பர் மாதத்தில், செனட்*

அவையினரால் உறுதிப்படுத்தப்பட்டார். மீண்டும் உள்நாட்டு யுத்தம் ஏற்படுவதைத் தடுப்பதற்காக, இவர் தமது மகன் டைட்டஸ் (தீத்து) தமக்குப் பின் ஆளவருவார் என்று குறிப்பிட்டார், இவ்விதமாக இவர் ஃபிளேவியன் அரசவம்சத்தைத் தோற்றுவித்தார்.

***டைட்டஸ் (தீத்து) (கி.பி. 79-81)***

டைட்டஸ் (தீத்து), கி.பி. 70ல் எருசலேமை அழித்த ரோமர் என்ற வகையில் நன்கு அறியப்படுகின்றார். ரோமாபுரியில் டைட்டஸின் பெயரால் எழுப்பப்பட்ட ஒரு நினைவு வளைவானது இந்த நிகழ்ச்சியைப் பற்றிய விபரங்களைத் தாங்கியிருக்கிறது. டைட்டஸ், தமது தகப்பனால் கட்டத் தொடங்கப்பட்ட ரோமாபுரியில் உள்ள புகழ்பெற்ற கொலோசியம் என்ற கட்டிடத்தின் கட்டுமானப்பணிகளை முடித்தமைக்காகவும் அறியப்படுகின்றார். வெசூவியஸ் என்ற எரிமலை வெடித்துச் சிதறியது என்பது இவரது ஆட்சிக்காலத்தில் நடைபெற்ற குறிப்பிடத்தக்க இயற்கைப் பேரழிவாக இருந்தது, இது பாம்ப்பி மற்றும் அதன் அருகாமையில் இருந்த மற்ற நகரங்கள் ஆகியவற்றை அழித்தது. டைட்டஸ் (தீத்து) காய்ச்சல் ஏற்பட்டதினால் கி.பி. 81ல் இறந்தார்.[12]

***டொமீஷியன் (கி.பி. 81-96)***

டைட்டஸைத் தொடர்ந்து அவரது இளைய சகோதரரான டொமீஷியன் ஆட்சி செய்ய வந்தார்.[13] டொமீஷியன் தமது மிக அதிகமான பேராவலினால் தமது தந்தை அல்லது சகோதரரால் அரசில் செயல்படும் பங்கு எதுவும் அளிக்கப்படாதிருந்தார். சிலவகைகளில் டொமீஷியன் செயல்திறனுள்ள பேரரசராய் இருந்தார். இவரது ஆளுகையின்போது, ரோமப்பேரரசின் எல்லைகள் பிரிட்டிஷ் தீவுகளில் இருந்து ஆப்பிரிக்கப் பாலைவனம் வரையிலும், அட்லாண்ட்டிக் கடலில் இருந்து ஐப்பிராத்து நதிவரையிலும் விரிவாக்கப்பட்டிருந்தது.[14]

டொமீஷியன், பேரரசர் வணக்கம் உட்படப் பழங்கால நடைமுறைகள் பலவற்றை வைராக்கியத்துடன் மீளக்கட்டுவித்தார். ஒரு சில பேரரசர்கள் தான் பேரரசர் வணக்கத்தை மும்முரமானதாக எடுத்துக்கொண்டிருந்தனர், ஆனால் டொமீஷியன் இதை மும்முரமானதாகவே எடுத்துக் கொண்டார். இவர், ''ஆண்டவரும் தேவனும்'' என்ற பட்டத்தைத் தமக்கென்று எடுத்துக்கொண்டு, தமது உருவச் சிலைகளை நாடு முழுவதிலும் நிறுத்தி வைத்தார். இவர் மக்கள் யாவரும் பேரரசரின் உருவச் சிலைக்கு வணக்கம் செலுத்தும்படி வற்புறுத்துவதைக் கடமையாகக் கொண்ட அலுவலர்களின் அமைப்பை ஏற்படுத்தி வைத்தார்.[15]

> ஆண்டிற்கு ஒருமுறை, பேரரசில் உள்ள ஒவ்வொருவருக்கும் டொமீஷியனின் நீதிபதிகள் முன்பாக வந்து நின்று வழிஷ்விளஷெி வற்ஷெிஷ்விவி, அதாவது, சீஸரே (இராயனே) ஆண்டவர் என்று கூறி, அதற்குச் சாட்சியாக, ஒரு கைப்பிடியளவு தூபவர்க்கத்தை சீஸரின் (இராயனின்) தேவத்துவத்திற்கு முன் (சிலைக்கு முன்) எரிக்க வேண்டும். பற்றுறுதிக்கான இந்தச் சோதனைக்குப் பின்பு, ஒரு

ஆண்டளவுக்குச் செல்லத்தக்கதான எழுதப்பட்ட சான்றிதழ் ஒன்று அவர்களுக்கு வழங்கப்பட்டது.[16]

டொமீஷியனின் கண்களில், பேரரச வணக்கம் என்பது அரியணையுடன் செய்துகொள்ளும் உடன்பாடாக இருந்தது, இவ்விதமாக அது பேரரசுடன் செய்து கொள்ளும் உடன்பாடாகவும் இருந்தது. இவரை தேவன் என்று ஒப்புக்கொள்ள மறுத்தல் என்பது இராஜதுரோகமாக இருந்தது.

கிறிஸ்தவர்கள் டொமீஷியனை வணங்க மறுத்தபோது,[17] இவர் முதன் முறையாகப் பேரரசு முழுவதிலும் ஒருங்கமைத்து ஏற்பாடு செய்யப்பட்டதான, சபையைத் துன்புறுத்துதல் என்ற நடவடிக்கையை மேற்கொண்டார். சித்திரவதை, மரணம் (பொதுவாக, தலை வெட்டப்படுதல்), நாடுகடத்தப் படுதல், மற்றும் சொத்துக்களைப் பறிமுதல் செய்தல் என்பவை பொதுவான தண்டனைகளாய் இருந்தன. மேலும், உரிமைகள் மற்றும் சலுகைகள் பெற்ற குடிமகனாக இனியும் கருதப்படாதிருத்தல் என்பது மிக உயர்ந்த வகையில் செயல்விளைவு ஏற்படுத்திய தண்டனையாக இருந்தது.

டொமீஷியன், தமது ஆளுகையின் முடிவுக்கு அண்மையில், சித்தப் பிரமை கொண்டவரானார். இவரைச் சுற்றிலும் இருந்த எவரொருவரும் பாதுகாப்பாக இருந்ததில்லை. இவரது மனைவியும் இரண்டு காவலர்களும் இவருக்கு எதிராகச் சூழ்ச்சி செய்தனர்; கி.பி. 96 செப்டம்பர் மாதத்தில், இவர் ஒரு கொலைகாரனால் கத்தியால் குத்தப்பட்டார். இவரது நினைவு செனட் சபையால் சபிக்கப்பட்டது, மற்றும் இவரது பெயர் பொது நினைவுச் சின்னங்களில் இருந்து அகற்றப்பட்டது. இது ஃபிளேவியன் அரசபரம்பரையை முடித்து வைத்தது.

### தொடர்ந்து நடைபெற்ற வரலாறு - மற்றும் பேரரசின் வீழ்ச்சி

டொமீஷியனைத் தொடர்ந்து “ஐந்து நல்ல பேரரசர்கள்” ஆண்டனர்: நெர்வா, ட்ரேஜன், ஹேட்ரியன், அந்தோனியஸ் பயஸ், மாற்குஸ் அவுரேலியஸ். இவர்களுடைய ஆட்சிகளின்போது, பேரரசில் வளமையானது அதன் உச்சிக்குச் சென்றது, ஆனால் இவர்களின் ஆட்சிகள், ரோமாபுரியின் “முடிவின் தொடக்கம்” என்றும் அழைக்கப்படுகின்றன:

> ஹேட்ரியன் ஆட்சியின்கீழ், பின்வாங்கும் கொள்கை ஒன்று தொடங்கிற்று; அதுமுதல் ரோமாபுரி ஒருக்காலும் உக்கிரமாய் இராமல், ஓய்வற்றுத் தாக்கிய காட்டுமிராண்டிகளுக்கு எதிராக எப்போதும் தன்னைத் தற்காத்துக் கொண்டிருந்தது. அந்தோனியஸ் பயஸ் மற்றும் மாற்குஸ் அவுரேலியஸ் ஆகியோரின் காலத்தில், பலவீனம் மற்றும் சிதைவு ஆகியவற்றின் தவறாத குறிகள் தோன்ற ஆரம்பித்தன. இது ரோமப் பேரரசின் அரசாங்கத்தினுடைய மிகச்சிறந்த மற்றும் மகிழ்ச்சி மிக்க காலகட்டமாக இருந்தது, ஆனால் இதுவே முடிவின் தொடக்கமாகவும் இருந்தது.[18]

மாற்குஸ் அவுரேலியஸின் ஆட்சியானது *Pax Romana* வை முடிவுக்குக்

கொண்டு வந்தது, மற்றும் அதைத் தொடர்ந்து ஒரு நூறு ஆண்டுகள் யுத்தம் நடைபெற்றது. படைகள் தங்கள் விருப்பப்படி பேரரசர்களை அரியணையில் அமர்த்தினர் மற்றும் அவர்களை நீக்கிப்போட்டனர். 313ல், கான்ஸ்டன்டைன் பேரரசர், மிலான் பிரகடனத்தை வெளியிட்டார், இது கிறிஸ்தவத்தை சட்டபூர்வமான மதமாக்கிற்று. கான்ஸ்டன்டைனின் இறப்புக்குப் பின்பு, ஒழுங்கு முறையற்ற இன்னொரு காலவேளை தொடர்ந்தது. கடைசியில் 576ல் ரோமாபுரியும் மேற்குப் பேரரசும் வீழ்ந்தன, இருப்பினும் கிழக்குப் பேரரசு - அதாவது, பைசாந்தியப் பேரரசு - இன்னொரு ஆயிரம் ஆண்டுகளுக்குப் பிழைத்திருந்தது.

ரோமப்பேரரசு "சாதிக்கப்பட்டவற்றிலேயே மாபெரும் அரசியல் சாதனை" என்று அழைக்கப்பட்டுள்ளது: "ஜுலியஸ் மற்றும் அவரைத் தொடர்ந்து வந்த அகஸ்டஸ் ஆகியோரின் நிலையான கட்டமைப்புடன் ஒப்பிடப்படும்போது, மகா அலெக்சாந்தர், சார்லிமெக்நே மற்றும் நெப்போலியன் ஆகியோரின் வெற்றிகள், மிகவும் சிறியவைகளாய்க் காணப்படுகின்றன."[19] ரோமப்பேரரசு, தேவனை ஒரு எதிராளியாக மேற்கொள்ள முடிவு செய்யாது இருந்திருந்தால், அது எவ்வளவு காலம் நீடித்து இருந்திருக்கும் என்று யார் அறிவார்?[20]

**ரோமாபுரி அரசு கிறிஸ்தவர்களைத் துன்புறுத்தியது ஏன்**

ரோமாபுரியல்லாத மதங்கள் அனுமதி பெற்றவை அல்லது அனுமதி பெறாதவை என்று வகைப் படுத்தப்பட்டிருந்தன. அனுமதி பெறாத மதங்கள் சட்டத்தினால் தண்டிக்கப்படக்கூடும், ஆனால் ரோமாபுரி அரசாங்கமானது, இந்த மதங்கள் நாட்டின் சமாதானத்திற்குப் பங்கம் விளைவிக்காத வரை அல்லது சமுகத்தின் ஒழுக்கத்தைக் கெடுக்காத வரை, இவற்றைக் குறித்து சகிப்புத் தன்மையுடன் இருந்தது. இருந்தபோதிலும், அனுமதி பெறாத மதங்களைப் பற்றிய சட்டமானது அவைகள் தேவைப் படும் வேளைக்காக நாட்டின் சட்டப் புத்தகத்தில் தக்கவைக்கப்பட்டன. (நாட்டின் மதத்தில் இருந்து ஒழுக்கம் பற்றிய தொடக்கக் கூறுகள் தவறிப்போயிருந்தன, மற்றும் அலுவலகரீதியான மதமானது, தனிநபரின் மீட்புக்காக இன்றி, நாட்டின் நலனுக்கானதாக, வெறுமனே ஒரு அரசியல் ரீதியான மற்றும் இராணுவ ரீதியான வடிவத்தையே கொண்டிருந்தது. ரோமர்களில் பலர் பல மதங்களைத் தழுவியிருந்தனர்.)

கிறிஸ்தவம் அனுமதி பெறாத ஒரு மதமாக இருந்தது. இது அனுமதி பெற்றிருந்த யூதமதத்தில் இருந்து கிளைவிட்டதாகக் கருதப்பட்டதால், ரோமாபுரியின் தொடக்க வரலாற்றில் ரோம அரசினால் சிறிதளவு கவனத்தையே பெற்றிருந்தது. இருப்பினும், நீரோவின் காலம் தொடங்கி, கிறிஸ்தவம் சந்தேகத்திற்குள்ளாகியது.

ரோமாபுரி மற்றும் கிறிஸ்தவம் ஆகியவற்றிற்கு இடையில் போராட்டம் என்பது பல காரணங்களினால் தவிர்க்க இயலாததாக இருந்தது. முதலாவது, இவ்விரண்டுமே உலகளாவிய பேரரசுகளாக இருந்தன. இரண்டாவது, ஒன்று தோன்றி ஒரு சில ஆண்டுகளுக்குள்ளாகவே மற்றதும் தோன்றினது. மூன்றாவது, இவ்விரண்டுமே எல்லா மனிதர்களிடமும்

*முழுமையான உடன்பாட்டைக் கேட்டுக் கொண்டன. இயேசு, "பூமியின் மேல் சமாதானத்தை அனுப்பவந்தேன் என்று எண்ணாதிருங்கள், சமாதானத்தையல்ல, பட்டயத்தையே அனுப்பவந்தேன்" என்று கூறினார் (மத்தேயு 10:34). கிறிஸ்தவத்தின் சத்தியமானது எவ்வித மாறுபாடுமின்றி தவறுடன் எதிர்த்து நிற்கிறது. கிறிஸ்துவுடன் போராடுவதற்குச் சாத்தான் தன்னிடம் உள்ள ஒவ்வொரு வழிமுறையையும் பயன்படுத்துவதை நாம் எதிர்பார்ப்போம் - அவன் முதல் நூற்றாண்டில் ரோமப்பேரரசைக் காட்டிலும் அதிக வல்லமை நிறைந்த ஆயுதமாக எதைப் பயன்படுத்தி யிருக்கக் கூடும்?*

*அப்போதிருந்த அனுமதி பெற்றிராத எல்லா மதங்களிலும் கிறிஸ்தவ மானது தண்டனை அளிப்பதற்கென்று தனித்துவப் படுத்தப்பட்டது. இது ஏன் இவ்வாறாயிற்று என்பதற்குச் சாத்தியக்கூறுள்ள சில காரணங்கள் பின்வருமாறு:*

*(1) கிறிஸ்தவமானது "இராஜ்யம்" என்பது பற்றி அதிகமாகக் கூறிற்று, மற்றும் பெரும்பாலான மக்கள், ஆவிக்குரிய இராஜ்யம் மற்றும் உலகப் பிரகாரமான இராஜ்யம் ஆகியவற்றிற்கு இடையில் உள்ள வேறுபாட்டைக் புரிந்துகொள்ளாது இருந்தனர்.*

*(2) கிறிஸ்தவர்களின் இறுதிநிலைக் கண்ணோட்டம் என்பது புரட்சிகர மானதாக ஒலித்தது. எல்லா விஷயங்களும் அழிதல் என்பது பற்றிக் கிறிஸ்தவப் பிரசங்கியார்கள் பேசினர்.*

*(3) அரசாங்கத் தலைவர்களைப் பதட்டம் அடைய வைக்கும் அனு சரிப்புகள் பலவற்றுடன் கிறிஸ்தவம் திடீரென்று தோன்றியதாகக் காணப் பட்டது.*

*(4) கிறிஸ்தவம் சகிக்க இயலாததாக இருந்தது. பெரும்பாலான மதங் களைப் போலின்றி, ஒருவர் வேறு என்னவாகவாவது இருந்து கொண்டே கிறிஸ்தவராகவும் இருக்க முடியாதிருந்தது. ஒரு நபர் கிறிஸ்தவராக வேண்டுமென்றால், அதற்கு முன் அவர் பரிசுத்தமானது என்று பற்றிக் கொண்டிருந்த எல்லாவற்றையும் விட்டுவிட வேண்டியதாயிருந்தது.*

*(5) கிறிஸ்தவம் என்பது தனித்துவம் வாய்ந்ததாக இருந்தது. மற்றவர்கள் "இரகசியக் கூடுதல்" என்று கருதிய வகையில் கிறிஸ்தவர்கள் அடிக்கடி இரவில் ஒன்று கூடினர். கிறிஸ்தவ போதனைகளும் செயல் முறைகளும் (சில வேளைகளில் வேண்டுமென்றே) பின்னிப் பிணைக்கப் பட்டிருந்தன மற்றும் இது தேவபக்தியின்மை என்றும் போலித்தனம் என்றும் விளக்கம் தரப்பட்டது. கிறிஸ்தவர்கள் குடித்து வெறிப்பவர்கள், கூடா உறவு கொள்பவர்கள், குழந்தைகளைக் கொல்லுபவர்கள் மற்றும் மனித மாம்சத்தைப் புசிப்பவர்கள் என்று பொய்யாகக் குற்றம் சாட்டப்பட்டனர்.*

*(6) அரசாங்கத்தின் கண்ணோக்கில் இருந்து பார்த்தபோது, கிறிஸ்தவர் கள் விடாப்பிடியர்களாய் இருந்தனர். கிறிஸ்தவர்கள் ஒரு கைப்பிடியளவு தூபவர்க்கத்தைப் பீடத்தில் இட வேண்டும் என்றே ரோமர்கள் விரும்பினர். அவர்களின் நிலைப்பாட்டில், அது அதிகமாகக் கேட்பதாயிருக்கவில்லை.*

*(7) மற்ற விசுவாசம் கொண்டவர்களின் கடவுள்கள், கடவுள்களே*

அல்ல என்று கிறிஸ்தவர்கள் கூறியதால், அவர்கள் நாத்திகர்கள் என்று கருதப்பட்டனர்.

காலம் கடந்தபோது, வானியல் பேரழிவுகள் யாவற்றிற்கும் கிறிஸ்தவர்கள் மீது குற்றம் சாட்டப்பட்டது. கிறிஸ்தவம் நிலைநாட்டப் படுவதற்கு முன்புகூட பேரழிவுகள் நிகழ்ந்திருந்தன என்று கிறிஸ்தவத்திற்குப் பரிந்து பேசியவர்கள் சுட்டிக்காண்பித்தனர். மேலும், பேரழிவு தாக்கும்போது, கிறிஸ்தவர்கள்தான் சுயத்தை மிகவும் தியாகம் செய்பவர்களாக, மக்களுக்கு உதவிசெய்பவர்களாக இருந்தனர். இப்படிப்பட்ட உண்மைகளை உணரும்படி அழைக்கப்பட்டதென்பது பிரச்சனையைத் தீர்க்கவில்லை, ஏனெனில் தப்பெண்ணமானது மிக அரிதாகவே காரணத்தைக் கவனிக்கிறது.[21]

### ரோமாபுரியின் ஒரு எதிராளி: பார்த்தியா

நடபடிகள் 2ல், பெந்தெகொஸ்தே நாளன்று கூடியிருந்த மக்களின் நாடுகளை லூக்கா பட்டியலிட்டபோது, அவர் பார்த்தர்கள் என்பவர்களை உள்ளடக்கினார் (வசனம் 9). பார்த்தியா என்பது காஸ்பியன் கடலின் தென்கிழக்கில் இருந்த, 300 மைல் நீளமும் 120 மைல் அகலமும் கொண்ட ஒரு சிறிய நாடாகும், இது இப்பொழுது வடக்கு ஈரான் மற்றும் தெற்கு துர்க்மெனிஸ்தான் என்று அழைக்கப்படுகிறது. இது ஒரு வளமான ஆனால் மலைகள் நிறைந்த நாடாகும்.

வெளிப்படுத்தின விசேஷம் எழுதப்பட்ட காலத்தில், பார்த்தியா நாடானது பழைய பெர்சியப் பேரரசின் பெரும்பகுதியை மேற்கொண்டு, மேற்கில் ஐப்பிராத்து நதியிலிருந்து கிழக்கில் ஆப்கானிஸ்தான் வரையிலும் இருந்த பகுதியின்மீது ஆட்சி செலுத்தி வந்தது. இது ஒன்றுமாத்திரமே ரோமாபுரிப் பேரரசின் எல்லைப் பகுதிகளில் குறிப்பிடத்தக்கதான இராணுவபலம் கொண்டதாக இருந்தது, மற்றும் நூற்றுக்கணக்கான ஆண்டுகளாக இது ரோமாபுரிக்கு விலாவில் தைத்த முள்போல் இருந்தது.


**வில்லும் கிரீடமும் உடைய சவாரி செய்பவர் (6:2)**

வெளிப்படுத்தின விசேஷம் புத்தகத்தில் உள்ள சில உருவகங்கள் பார்த்தர்களைப் பற்றி எடுத்துரைக்கலாம். எடுத்துக்காட்டாக, 6:2ல் உள்ள, கிரீடம் மற்றும் வில் ஆகியவற்றுடன் குதிரையில் பயணம் செய்பவன் என்பது பெர்சியா/பார்த்தியாவின் நாணயங்களில் எஞ்சியவற்றில், தனது கையில் ஒரு வில்லையும் தலையில் ஒரு கிரீடத்தையும் கொண்ட குதிரை வீரன் ஒருவனைச் சித்தரித்தது. “பார்த்தியப் போர்வீரர்கள் திறமை மிகுந்த குதிரை வீரர்களாகவும் வில்லாளர்களாகவும் இருந்தனர், மற்றும் உண்மையான அல்லது நடிப்பான யுத்தத்தில் அவர்கள் தங்கள் எதிரிகளின் முதுகில் அம்புகளை எய்யும் அவர்களின் யுக்தியானது, ‘பார்த்தியனின் அம்பு எய்யப்படுதல் என்பது கடைசி வார்த்தையைக் கேட்டுக்கொள்ள வேண்டும் என்பதை

அர்த்தப்படுத்துகிறது' என்ற சொல்விளக்கம் எழுவதற்குக் காரணமாயிற்று."[22]

ஒருவேளை, பார்த்தியர்களைப் பற்றிய மிகத்தெளிவான மறைகருத் தானது அதிகாரங்கள் 9 மற்றும் 16ல் காணப்படுகின்றன எனலாம்: அதிகாரம் 9, "ஐபிராத்தென்னும் பெரிய நதி"யைப் பற்றிப் பேசுகிறது, அங்கு மனிதகுலத்தைத் தண்டிப்பதற்காக நான்கு தூதர்கள் அவிழ்த்துவிடப் பட்டனர்; பிற்பாடு இந்தத் தூதர்கள் "குதிரைச்சேனைகளாகிய இராணுவங்கள்" என்று அடையாளப்படுத்தப் பட்டனர் (வசனங்கள் 14-16). அதிகாரம் 16 மீண்டுமாக, "ஐபிராத் என்னும் பெரிய நதி" என்பதை "சூரியன் உதிக்குந்திசையிலிருந்துவரும் ராஜாக்கள்" என்பதுடன் சேர்த்துக் குறிப்பிடுகிறது (வசனம் 12). இந்த இராஜாக்கள் தேவன் தமது நோக்கங்களை நிறைவேற்றிக் கொள்வதற்கு அவரால் பயன்படுத்தப்படுவார்கள் என்பதே இங்கு மறைவான கருத்தாக உள்ளது.

ரோம வரலாற்றிலிருந்து வரும் ஒரு நிகழ்ச்சியானது, பார்த்தியாவும் ஐப்பிராத்து நதியும் ரோமப் பேரரசுக்குக் குறிப்பிடத் தக்கவைகளாய் இருந்தன என்பதை விவரிக்கிறது. மாற்குஸ் லிஸினியஸ் கிரேஸ்ஸஸ் என்பவர் ஜுலியஸ் சீஸர்[23] (இராயன்) மற்றும் மகா பாம்ப்பே ஆகியோரு டன் இணைந்து, "முதல் டிரையம்விரேட்" என்று அழைக்கப்பட்ட ஒன்றை வடிவமைத்தார். சீஸருக்கு (இராயனுக்கு) எதிராக பெயர்பெறவும், செல்வத்தில் தழைக்கவும் தீர்மானித்த கிரேஸ்ஸஸ், பார்த்தியாவைக் கீழ்ப்படுத்த முடிவு செய்தார். கி.மு. 53ல் அவர் ஐப்பிராத்து நதியைக் கடந்து சென்றார். கார்ஹே என்ற இடத்தில் நடைபெற்ற போரில் 20,000 ரோமர்கள் இறந்தனர், 10,000 பேர் அடிமைகளாகப் பிடித்துக் கொண்டு போகப்பட்டனர், ரோம அடையாளக்கொடி காணாமற் போனது, மற்றும் கிரேஸ்ஸஸ் தாமே கொல்லப்பட்டார். பின்பு பார்த்தியர்கள் ஐப்பிராத்து நதியைக் கடந்து வந்து வடக்கு சிரியாவை அழித்தனர். "ஐபிராத் என்னும் பெரிய நதி"யின் குறுக்காக "சூரியன் உதிக்குந் திசையிலிருந்துவரும் ராஜாக்கள்" தாக்குதலைத் தொடுத்தனர் என்ற கருத்தும்கூட, ரோமப் படைத்தளபதி ஒருவரின் நரம்பில் குளிரைப் பாய்ச்சுவதாக இருந்தது.

பார்த்திய அரச வம்சமானது கி.பி. 224ல் சஸ்ஸானியர்களால் வெற்றிகொள்ளப்பட்டதால், ரோமப்பேரரசின் கடைசி வீழ்ச்சிக்குப் பார்த்தியர்கள் நேரடியான காரணமாய் இருந்ததில்லை. ஆகையால், வெளிப்படுத்தின விசேஷத்தில் பார்த்தியர்களைப் பற்றிய உருவகமானது நேரடியான அர்த்தத்தில் எடுத்துக் கொள்ளப்படக் கூடாது. மாறாக, அது ரோமப்பேரரசை அழிப்பதற்குத் தேவனால் பயன்படுத்தப்பட்ட படைகளை - ஒருவேளை இராணுவப் படைகளை - அடையாளப்படுத்து கிறது. ரோமப் பேரரசின் வீழ்ச்சிக்கு, வெளியிலிருந்து வந்த படையெடுத் தல் என்பது குறிப்பிடத்தக்க காரணியாக இருந்தது.[24]

### ரோமாபுரி வீழ்ந்தது ஏன்?

ரோமாபுரியின் வீழ்ச்சிக்கு ரே சம்மர்ஸ் அவர்கள் மூன்று முகமை களைக் காரணங்களாகக் குறிப்பிட்டார்: "... பேரரசான ரோமாபுரி மூன்று

முகமைகளின் இணைவினால் வீழ்ந்தது என்பது அறியப்பட்ட உண்மையாக உள்ளது: இயற்கைப் பேரழிவு, உள்ளான நலிவு மற்றும் வெளியிலிருந்து வந்த படையெடுப்பு."[25]

*The Decline and Fall of the Roman Empire* என்ற புத்தகத்தின் எழுத்தாளரான எட்வர்ட் கிப்பன் என்பவர், உள்ளான சிதைவு என்பதே தீர்மானிக்கும் காரணியாக இருந்தது என்று நம்பினார், இவர் ரோமாபுரி யின் வீழ்ச்சிக்கு ஐந்து காரணங்களைப் பட்டியலிட்டார்:

- விவாக இரத்துக்களின் வேகமான பெருக்கம்; மனித சமூகத்தி அடிப்படையாகஉள்ள இல்லத்தின் கண்ணியம் மற்றும் பரிசுத்தம் பற்றிய கருத்துக்களைக் குறைத்து மதிப்பிட்ட தன்மை.
- வரிகள் மேலும் மேலும் உயர்ந்து கொண்டே சென்றது மற்றும் பொதுப் பணத்தை மக்களின் இலவச உணவுக்காகவும் கேளிக்கைகளுக்காகவும் செலவிட்டது.
- வெளிப்படுத்தின விசேஷம் சந்தோஷம் பெற வேண்டும் என்ற பைத்தியக்காரத்தனமான ஆவல்; ஒவ்வொரு ஆண்டிலும் விளையாட்டு என்பது அதிகம்அதிகமாக உணர் வெழுச்சியூட்டுவதாகவும் மிருகத்தனமானதாகவும் ஆயிற்று.
- பெரிய அளவிலானப் போர் ஆயுதத்தளவாடங்களைக் கட்டுவித்தல், ஆனால் எதிரியானவன் உண்மையில் உள்ளேயே இருந்தான்: மக்களின் கீழ்த்தரமான பண்புகள்.
- மதத்தின் சீரழிவு - விசுவாசம் என்பது வெறும் வடிவமாகத் தேய்ந்து போனது - இது வாழ்வைத் தொடுவதை இழந்து நின்றது மற்றும் இது மக்களை எச்சரிக்கவும் வழிநடத்தவும் முடியாத ஒன்றாகியது.[26]

கிப்பனின் ஐந்து காரணங்கள், சம்மர்ஸ் அவர்களால் தரப்பட்ட இரண்டாவது முகமையின் கீழான துணைக்கருத்துக்களாக நினைக்கப் படலாம்.

வெளிப்படுத்தின விசேஷத்தில் நாம் நமது படிப்பைத் தொடரும்போது இந்தக் காரணிகளைச் சிந்தையில் வைத்துக் கொள்ளுங்கள். புத்தகத்தின் அடையாளத்துவத்தில் நாம் அவ்வப்போது இவைகளை சந்திப்போம்.

## வெளிப்படுத்தின விசேஷம் புத்தகத்திற்கே உரிய தனிச்சிறந்த அடையாளங்கள்

வெளிப்படுத்தின விசேஷம் புத்தகத்தில் உள்ள சில அடையாளங்கள் தனிச்சிறந்தவைகளாய் உள்ளன. இவைகள் பழைய ஏற்பாட்டிலோ, பிற இறைவெளிப்பாட்டு இலக்கியங்களிலோ அல்லது அந்த காலகட்டத்தின் வரலாற்றுப் பதிவேடுகளிலோ காணப்படுவதில்லை. முந்திய பாடத்தின் தொடக்கத்தில் குறிப்பிடப்பட்ட பெரிய சிவப்பான வலுசர்ப்பம் மற்றும் அந்த வலுசர்ப்பத்தின் முன்னால் நின்ற பெண் என்பவைகள் உதாரணங் களில் உள்ளடங்குகின்றன (அதிகாரம் 12). நாம் இந்தத் தனிச்சிறந்த அடையாளங்களைப் பட்டியலிடுவதற்கு மாறாக, வசனப்பகுதியில்

அவைகளை நாம் எதிர்கொள்ளும் வேளையில் அவை ஒவ்வொன்றைப் பற்றியும் ஆழ்ந்து சிந்திப்போம். இவற்றில் சில அடையாளங்கள் வசனப்பகுதியினாலேயே விளக்கப்படுகின்றன (12:9ஐக் காணவும்). எஞ்சியவற்றை நாம், உடனடி சந்தர்ப்பப் பொருள் மற்றும் வெளிப்படுத்தின விசேஷம் புத்தகத்தின் முழுமையான செய்தி ஆகியவற்றின்படி விளக்கப்படுத்த வேண்டும்.

## முடிவுரை

இது, வெளிப்படுத்தின விசேஷம் புத்தகத்தில் உள்ள அடையாளங்களின் அடிப்படை வகைகள் நான்கைப் பற்றிய நமது பாடத்தை முடித்து வைக்கிறது: (1) எண்கள் அடையாளத்துவமாகப் பயன்படுத்தப்படுதல், (2) பழைய ஏற்பாட்டில் இருந்து அடையாளத்துவம், (3) வரலாற்றுப் பின்னணியை அடிப்படையாகக் கொண்ட அடையாளங்கள், மற்றும் (4) வெளிப்படுத்தின விசேஷம் புத்தகத்திற்கே உரிய தனிச்சிறந்த அடையாளங் கள்.

இந்தப் புத்தகத்தில் அடையாளங்களின் மற்ற வகைகளும் உள்ளன என்று நான் முன்னதாகக் குறிப்பிட்டிருந்தேன். எடுத்துக்காட்டாக, நிறங்கள் அடையாளத்துவமாய்ப் பயன்படுத்தப் பட்டுள்ளன:

> வெள்ளை நிறம் என்பது இறைவெளிப்பாட்டு இலக்கியத்தில் மிகவும் பொதுவாகக் காணப்படுகிற நிறமாக உள்ளது, இது வெற்றியை அடையாளப்படுத்துகிறது. ... சிவப்பு நிறம் என்பது அடிக்கடி காணப்படுகிறது, இது யுத்தம் அல்லது போராட்டத்தைச் சுட்டிக்காண்பிக்கிறது. கறுப்பு நிறம் ஏதோ சில விஷயங்கள் குறைவுபடுதலை, பஞ்சகாலத்தில் உணவுக் குறைபாட்டை அல்லது கொள்ளை நோய் அல்லது பெருவாரி வியாதிகள் ஏற்படுகையில் ஆரோக்கியக் குறைபாட்டைக் குறிக்கிறது.[27]

வெளிப்படுத்தின விசேஷத்தில் நாம், புதிய ஏற்பாட்டின் சில அடையாளங்களையும் காண்போம். வெளிப்படுத்தின விசேஷம் எழுதப்பட்ட காலத்திற்குச் சில பத்தாண்டுகள் முன்னதாகவே புதிய ஏற்பாட்டின் சில புத்தகங்கள் சுற்றுக்கு விடப்பட்டிருந்தன. இயேசு ஒரு “மாசற்ற ஆட்டுக் குட்டி”யாக இருக்கின்றார் (1 பேதுரு 1:19) மற்றும் சபையானது ஆபிரகாமின் ஆவிக்குரிய சந்ததியாய் இருக்கிறது (கலாத்தியர் 3:7) என்ற கருத்துக்கள், பெரும்பாலான கிறிஸ்தவர்களுக்கு நன்கு பழக்க மானவைகளாய் இருந்திருக்கும்.[28] நாம் வசனப்பகுதியைக் கடக்கவரும் போது, உருவகத்தின் மற்ற வகைகளைக் கையாள முடியும். இப்போதைக்கு, அடையாளங்களின் நான்கு வகைகள் பற்றி அறிந்து கொள்ளுதல் என்பது போதுமானதாகும்.

மீண்டும் ஒருமுறை நான், இந்தப் பாடத்தின் பல விபரங்கள் குறித்து நீங்கள் மூழ்கிப்போய்விட வேண்டாம் என்று உங்களை வற்புறுத்துகின் றேன்! மாறாக, இதைத் தொடர்ந்து வருகிற கேள்விகளுக்குள் நீங்கள்

செல்லுகையில், பாடத்தின் பகுதிக்குத் திரும்பச் சென்று, பதில்களை அடிக் கோடிடுங்கள். அது நீங்கள் நினைவில் வைத்திருக்க வேண்டிய மிக முக்கியமான உண்மைகளை முக்கியத்துவப் படுத்திக் காண்பிக்கும்.

*நீங்கள் இன்னமும் என்னோடு இருக்கின்றீர்களா? நீங்கள் இன்னமும் வெளிப்படுத்தின விசேஷம் புத்தகத்தைப் படிப்பதற்கு - அதைப் புரிந்து கொள்வதற்கு - ஒப்புக்கொடுத்தலுடன் இருக்கின்றீர்களா? அப்படியென் றால், உற்சாகம் குறைந்துபோய்விடாதீர்கள். உங்கள் தலையை நிமிர்த்திக் கொள்ளுங்கள்; நீங்கள் நன்றாகவே இருக்கின்றீர்கள்! அறிமுகம் பற்றி நாம் இன்னும் ஒரே ஒரு பாடத்தைக் கொண்டுள்ளோம், பின்பு நாம் வெளிப் படுத்தின விசேஷத்தின் வசனப்பகுதியில் இருப்போம்!*

---

குறிப்புகள்

[1]"Signified" என்பது இங்கு பயன்படுத்தப் பட்டுள்ள கிரேக்க வார்த்தையின் நேரடி மொழிபெயர்ப்பாக உள்ளது. NASB வேதாகமம், "signified" என்பதற்கு பதிலாக, "communicated" என்பதைக் கொண்டுள்ளது, ஆனாலும் அதில் பின்வரும் பக்கக் குறிப்பு உள்ளது: "Or *signified*." [2]*Bagster's Analytical Greek Lexicon* (1971), s.v. "signify." [3]W. E. Vine, *The Expanded Vine's Expository Dictionary of New Testament Words,* ed. John R. Kohlenberger III with James A. Swanson (Minneapolis, Minn.: Bethany House Publishers, 1984), 1043. [4]வெளிப்படுத்தின விசேஷத்தில் பழைய ஏற்பாட்டின் குறிப்புகள் நூற்றுக்கணக்கில் உள்ளன, ஆனால் நேரடியான மேற்கோள்கள் எதுவும் இல்லை. வெளிப்படுத்தின விசேஷம் புத்தகத்தில் பழைய ஏற்பாட்டின் வேர்கள் பற்றிய கூடுதலான படிப்பிற்கு, Ferrell Jenkins, *The Old Testament in the Book of Revelation* (Marion, Ind.: Cogdill Foundation Publications, 1972) என்ற புத்தகத்தில் காணவும். [5]வெளிப்படுத்தின விசேஷம் 7:4-8க்கான கூடுதல் விளக்கங்களுக்கு, இனி வெளிவரவிருக்கும் "வெளி. 2" என்ற புத்தகத்தில் "புயலின் மையத்தில் அமைதி" என்ற பாடத்தில் காணவும். [6]ஜுலியஸ் என்பவர் "முதல் பேரரசராக" இருந்தாரா இல்லையா என்பது பற்றிச் சில கேள்விகள் உள்ளன. ரே சம்மர்ஸ் அவர்கள், "ஜுலியஸ் சீஸர்தான் ரோமாபுரியின் முதல் பேரரசர் என்பது பிரபலமான புரிந்து கொள்ளுதலாக இருந்தது; கண்டிப்பான அரசியல் அமைப்புச் சட்டத்தில், அகஸ்டஸ் சீஸர்தான் அரசாங்கத்தின் நிலைநாட்டப்பட்ட வடிவம் ஒன்றைப் பேரரசு என்ற வகையில் பற்றிக் கொண்டிருந்தார்" என்று கூறினார் (*Worthy Is the Lamb* [Nashville: Broadman Press, 1951], 81). ஜுலியஸ் சீஸர் "Praenomen Imperatoris" என்ற பெயரை உரிமை கோரியிருந்தாலும், அவர் "பிந்திய கருத்தமைவின்படி ஒரு Imperator (சக்கரவர்த்தி) என்பதைக் காட்டிலும் ஒரு Dictator (சர்வாதிகாரி) என்பவராகவே இருந்தார்" என்று ஹென்ரி ஸ்வீட் அவர்கள் கூறினார் (*The Apocalypse of St. John* [Cambridge: MacMillan Co. 1908; reprint, Grand Rapids, Mich.: Wm. B. Eerdmans Publishing Co., n.d.] 220). [7]உலக எழுத்தாளர்கள் சிலவேளைகளில் குறைவான தகுதி கொண்ட வர்களைக் குறிப்பிடுவதற்கு "சீஸர்" என்ற வார்த்தையைப் பயன்படுத்தினர், ஆனால் இந்த வார்த்தையை வேதாகமம் இராயனைக் குறிப்பதற்கு மாத்திரம் பயன்படுத்துகிறது. [8]ஆக்டேவியனின் ஆட்சி கி.மு. 31ல் தொடங்கியதென்று சிலர் குறிப்பிடு கின்றனர். [9]*Koine* என்றால் "பொதுவான" என்று அர்த்தப்படுகிறது. *Koine* கிரேக்கமொழி என்பது தெருவில் சராசரி நபருடைய மொழியாக இருந்தது. [10]இது பேரரசு முழுவதிலுமான

துன்புறுத்துதலாக இருந்ததில்லை, ஆனால் இது பிந்திய துன்புறுத்தல் ஒன்றிற்கு முன்னோடியாக அமைக்கப்பட்டிருந்தது.

[11]நாம் இந்த மூடநம்பிக்கையான கதையை, வெளிப்படுத்தின விசேஷம் 13ம் அதிகாரம் தொடர்பான நமது பாடத்தில் சுருக்கமாய்க் குறிப்பிடுவோம். [12]இவர் தமது சகோதரரான டொமீஷியனால் விஷம் வைத்துக் கொல்லப்பட்டாரோ என்று சிலர் சந்தேகப்படுகின்றனர். [13]டொமீஷியனின் ஆட்சி பற்றிய ஒரு தொகுப்புரையானது William Barclay, *The Revelation of John*, vol. 2, rev. ed., The Daily Study Bible Series (Philadelphia: Westminster Press, 1976), 139-41 என்ற புத்தகத்தில் தரப்பட்டுள்ளது. [14]இந்தப் புத்தகத்தில் ரோமப் பேரரசின் வரைபடத்தைக் காணவும். [15]*Praefectus urbi* என்று அறியப்பட்ட ஒரு அலுவலக அமைப்பானது, ஒவ்வொரு நகரத்திலும் இந்த வணக்கத்தை அமல்படுத்தும் பொறுப்புக் கொண்டதாக இருந்தது. ஒவ்வொரு நகரத்திலும் இருந்த பிரதிநிதிகள்/இணை அதிகாரிகள், அதிகாரம் நிறைந்த *concilia* என்ற அமைப்பில் அங்கம் வகித்தனர், இது பேரரசர் வணக்கத்திற்கென்று பீடங்களையும் அவரது உருவச்சிலைகளையும் கட்டியெழுப்பும் பொறுப்புக் கொண்டிருந்தது, மற்றும் இது அவசியமான ஒவ்வொரு வழியிலும் நாட்டின் மதத்தை மேம்படுத்தும் பொறுப்பையும் கொண்டிருந்தது. [16]Hugo McCord, *The Royal Route of Revelation* (Nashville: 20th Century Christian, 1976), 13. ஒரு கைப்பிடியளவு தூபவர்க்கத்தை பீடத்தில் இடுதல் என்பது, ஒரு நபர் கிறிஸ்தவராயிருந்தாரா இல்லையா என்பதைத் தீர்மானிப்பதற்கான ஒரு சோதனையாக இருந்தது (உண்மைநிறைந்த கிறிஸ்தவர்கள் இதைச் செய்யமாட்டார்கள்). இதை ஒரு சோதனையாக வடிவமைத்த பெருமை டொமீஷியனையே சாரும். [17]அவர்கள் ஏன் அதைச் செய்யமாட்டார்கள் என்பதைப் புரிந்து கொள்வதற்கு, 1 கொரிந்தியர் 8:5, 6; எபேசியர் 5:4, 5; நடபடிகள் 4:12 ஆகிய வசனங்களை வாசித்துப் பார்க்கவும். நெருப்பில் ஒரு கைப்பிடியளவு தூபவர்க்கத்தைப் போட்ட கிறிஸ்தவர்களிடமிருந்து சபைக்குழுமங்கள் ஐக்கியத்தை விலக்கிக் கொண்டன. [18]S. Angus, "Roman Empire," *The International Standard Bible Encyclopedia,* gen. ed. James Orr (Grand Rapids, Mich.: Wm. B. Eerdmans Publishing Co., 1960), 4:2598-99. [19]Ibid., 4:2598. [20]நாம் வெளிப்படுத்தின விசேஷம் புத்தகத்தினூடே கடந்து செல்லுகையில் இந்த வரலாற்று உண்மையைச் சிந்தையில் வைத்துக் கொள்ளுங்கள். நீங்கள் வரலாற்றுரீதியான அடையாளத்துவத்திற்குச் சில உதாரணங்களை முன்னதாகவே நினைக்க விரும்பினால், டொமீஷியனை 13:1-10ல் உள்ள மிருகத்துடன் ஒப்பிட்டுப் பாருங்கள் (வசனங்கள் 14, 15ஐயும் காணவும்). கிலவுதியுவின் காலத்தின் போது இருந்த வர்த்தகத்தின் வெற்றியை 18:11-13ல் உள்ள பட்டியலுடன் ஒப்பிட்டுப் பார்க்கவும். பேரரசர்களின் முழுப்பட்டியலையும் 17:10, 11ல் உள்ள மறைவான கூற்றுடன் வைத்து நோக்கவும்.

[21]Much of this material was adapted from S. Angus, "Roman Empire and Christianity," in *International Standard Bible Encyclopedia*, ed. James Orr (Grand Rapids, Mich.: Wm. B. Eerdmans Publishing Co., 1960), 4:2598-611. For further study on this subject, see Ray Summers, *Worthy Is the Lamb* (Nashville: Broadman Press, 1951), 87-88. [22]*Grolier Multimedia Encyclopedia* (1995), s.v. "Parthia," by Richard N. Frye. [23]இந்தப் புத்தகத்தில் உள்ள "குறிப்பிடத்தக்க குறிகளும் திகைப்பூட்டும் அடையாளங்களும்" என்ற பாடத்தில் ஜுலியஸ் சீஸர் (இராயன்) பற்றிய குறிப்பைக் காணவும். [24]இந்தப் புத்தகத்தில் உள்ள "ரோமாபுரி வீழ்ந்தது ஏன்?" என்ற துணைப் பாடத்தில் காணவும். [25]Ray Summers, *Worthy Is the Lamb* (Nashville: Broadman Press, 1951), 43. [26]Quoted in Paul Lee Tan, *Encyclopedia of 7,700 Illustrations: Signs of the Times* (Rockville, Md.: Assurance Publishers, 1979), 250. [27]James M. Efird, *Revelation for Today* (Nashville:

Abingdon Press, 1989), 25. [28]*வில்லியம் ஹென்ரிக்ஸென் அவர்கள் எழுதிய More Than Conquerors* (Grand Rapids, Mich.: Baker Book House, 1954), 61 *என்ற புத்தகத்தில் வெளிப்படுத்தின விசேஷத்தில் பிரதிபலிக்கிற புதிய ஏற்பாட்டு வசனப்பகுதிகள் சிலவற்றைப் பட்டியலிட்டார்.*

---

## மறுகண்ணோட்டம் மற்றும் கலந்துரையாடல் ஆகியவற்றிற்கான கேள்விகள்

1. *அடையாளங்களின் நான்கு அடிப்படை வகைகள் யாவை?*
2. *நீங்கள் பழைய ஏற்பாட்டின் குறிப்பை அதற்கு இணையான வெளிப்படுத்தின விசேஷத்தின் குறிப்புடன் ஒப்பிடுகையில் "திரிபு" எதுவும் உள்ளதா என்று கண்ணோக்க வேண்டும் என்று இந்தப் பாடம் ஆலோசனை தெரிவிக்கிறது. "திரிபு" என்பதன் மூலம் இந்த எழுத்தாளர் எதனை அர்த்தப் படுத்துகின்றார்? மற்றும் அது எதைத் தனிச்சிறப்பாகக் குறிக்கிறது?*
3. *ரோமப் பேரரசைத் தோற்றுவித்தது யார்?*
4. *முதல் ரோமப் பேரரசர் யார்?*
5. *பவுல் எந்த சீஸரிடத்தில் (ராயனிடத்தில்) அபயமிட்டார்?*
6. *கிறிஸ்தவர்கள் மீது திட்டவட்டமான முதல் துன்புறுத்துதலைத் தொடங்கி வைத்த சீஸர் (ராயன்) யார்?*
7. *நீரோ இறந்த பின்பு எழுந்த புராண/மூடநம்பிக்கையான கதை என்ன?*
8. *எருசலேமை அழித்த பேரரசர் (இதை அவர் பேரரசர் ஆகும் முன்பாகச் செய்தவர்) யார்?*
9. *தீத்துவின் ஆட்சிக்காலத்தின்போது நடந்த குறிப்பிடத்தக்க இயற்கைப் பேரழிவு என்ன?*
10. *கிறிஸ்தவர்களுக்கு, பேரரசு முழுவதிலும் ஒருங்கமைத்துத் துன் புறுத்துதலைத் தொடங்கி வைத்த முதல் சீஸர் (ராயன்) யார்?*
11. *ஒரு தனிநபர் கிறிஸ்தவரா அல்லவா என்று கண்டறிவதற்காகப் பயன்படுத்தப்பட்ட (டொமீஷியனுக்கு உரித்தான) எளிய சோதனையாக இருந்தது எது? (இதற்கான பதிலுக்கு அடிக்குறிப்புகளில் காணவும்.)*
12. *இந்தப் பாடமானது, கிறிஸ்தவர்கள் தண்டிக்கப்பட்ட ஐந்து வழிமுறைகளைப் பட்டியலிடுகிறது. அவற்றைப் பெயர் குறிப்பிடவும்.*

கி.பி. 100ம் ஆண்டளவில் ரோமப் பேரரசு
நாடுகள் மற்றும் நகரங்களின் பெயர்கள்

